Registered as a Newspaper

தரமான சேட்டிங்
★ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூ 2/.

இம்போட்டந்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஸு கார்த்திகை மீ 12 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ற.ஆகிர் பிறை 16 (27-11-1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 1

★ ஜே.வி.பியின் மிரட்டலினுல்

# ஜனுதிபதித் தேர்தல் குழம்பும் நிலையில்!

## அரச உயர்மட்டத்தில் அச்சம்

கொழும்பு, நவம்பர் 27

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இயக்கத்தின் மிரட்டல் காரணமாக எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜனுதிபதித் தேர்தல் குழம்பும் நிலை ஏற்பட்டிருப்பதாக அரச உயர்மட்டத்தில் அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜே.வி.பியின் மிரட்டலினுல் மக்கள் வாக்களிக்க முடியாத நிலை உருவாகியிருப்பது ஒருபுறமிருக்க—

தேர்தல் கடமைகளைப் பொறுப்பேற்றுச்செயற்பட அரச ஊழியர்கள் பின்னடித்து வருவதால் தேர்தலை நடத்துவதே சாத்தியப்படுமா என்ற கேள்வி மறுபுறத்தில் கிளம்பியிருக்கிறது.

தேர்தல் தினத்தன்று மக்கள் வீடுகளை விட்டு வெளியேறக் கூடாது என்று ஜே. வி. பியினர் மிரட்டல் விடுக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும்.

இதனை முறியடித்து மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கான வழிவகையினைப் பற்றி அரச தரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களில் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளில் தேர்தல் பகிஷ்கரிப்புக் கோரிக்கை வெற்றி பெற்றிருப்பது அரசாங்க மட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆளும் ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிராக மட்டுமன்றி, ஜனுதிபதித்தேர்தலில் போட்டியிடும் மற் (6ஆம் பக்கம் பார்க்க)

## ★ எரிபொருள் வந்தது

யாழ்ப்பாணம்,நவ, 27

யாழ் - மாவட்டத்திற்கான எரிபொருளை ஏற்றிக் கொண்டு ரயில் ஒன்று நேற்று யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தது.

வடபகுதியில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை ஓரளவு தவிர்ப்பதற்குப் போதுமான எரிபொருள் இந்த ரயிலில் எடுத்து வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு

## மாகாண அமைச்சரவை; சகல கட்சிகளுக்கும் இடம்

கொழும்பு, நவ. 27

வடக்கு, கிழக்கு மாகாணசபை அமைச்சரவையில் தேர்தலில் போட்டியிட்ட சகலகட்சிகளும் இடம்பெறும் என்று இந்திய வா. ஞெலி நேற்று அறிவித்தது.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சிகளின் ஆசன விவரங்களை இலங்கை இந்திய அரசுகள் நேற்று வெளியிட்டன. (ஒ-எ)

முச்சந்தி முரளி



முதலிலை ஹெல்மெட் வேண்டாம் எண்டுகினம். இப்ப ரெண்டு பேர் போகக் கூடாது எண்டியினம். இனி மோட்டார் சைக்கிளே ஓடக் கூடாது எண்டுவினம போலை...!

## மீண்டும் தடை

மோட்டர் சைக்கிள் மறறும் சைக்கிள் களில் இருவர் பயணம் செய்வது மீண்டும் தடை செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் நேற்று வெளியிட்ட விசேட அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## 31 மணிநேர ஊரடங்கு

ஹன்வல, கெஸ்பாவ, கடுவல, மஹரகம ஆகிய பகுதிகளில் நேற்று இரவு 9 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நாளை திங்கட்கிழமை காலை 4 மணிக்கு 31 மணித்தியாலத்தின் பின்னர் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)



உதயவேளையில் வானத்து உதயன் உதித்ததும், பொய்கையில் செந்தாமரை அலர்ந்து மலர்வது அன்றுடக் காலைக்காட்சி.

அந்தக்காட்சி,காலையில் உதயனைக் கையில் எடுத்ததும் வாசகர்களின்இதயக் கமலங்கள் பூரித்துப் பொலிவதை ஒப்பதல்லவா?

அந்த அற்புதப் பின்னணியில் நான்காவது வயதில் உதயன் தனது தளிர்ப் பாதங்களைப் பதித்து புன்முறுவலித்து, புதிய அகவையை எதிர்கொண்டு இளநடை போடுவதை உங்களுக்கு ஓவியமாக்கித் தந்திருக்கின்ரேும்.

(உதயன் மூன்றும் ஆண்டு நிறைவுமலர் உள்ளே)

யாழ் மாநகர சபையின்

## புதிய ஆணையாளராக அன்ரன் அல்பிரட் நியமனம்

யாழ்ப்பாணம் நவ 27

யாழ் மாநகர சபையின் புதிய ஆணையாளராக, உள்ளுராட்சி உதவி ஆணையாளரான திரு. அன்ரன் அல்பிரட் நேற்று முன்தினம் 25 ஆம் திகதியில் இருந்து பதவி ஏற்றுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதியில் இருந்து மேற்படி பதவிக்கு திரு. அன்ரன் அல்பிரட் நியமிக்கப்பட்டுள்ளதாக உள்ளுராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 23 வருடங்களாக அரச சேவையில் ஈடுபட்டுவரும் இவர் கடந்த 10 வருடங்களாக நிர்வாக சேவையின் முதல்தர உத்தியோகத்தராகச் செயற்பட்டு வருகிறுர்.

யாழ். மாநகர சபை ஆணையாளராகவும் உள்ளுராட்சி உதவி ஆணையாளராகவும் ஒரே நேரத்தில் இவர் பதவி வகிப்பார் என்று தெரிய வருகின்றது. (ஒ-5)

1989 ஆம் ஆண்டில்

## சுகாதாரத் திணைக்கள ஊழியருக்கு கடன் இல்லை

யாழ்ப்பாணம், நவ 27

1989 ஆம் ஆண்டில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு எந்தவிதமான கடன் சலுகைகளும் வழங்கப் படமாட்டாது.

இவ்வாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சிடம் போதியளவு நிதி இல்லாதிருப்பதன் காரணமாகவே கடன் சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

இதேவேளை வடபகுதியில் உள்ள சுகாதாரத் திணைக்களங்களுக்கு பொது ஸ்தாபனங்கள் உதவி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

### சுபநேரம்

27-11-1988
கார்த்திகை 12
சுபநேரம்:-
09-13 முதல்10-43வரை
ராகுகாலம்:-
4.43 முதல் 06-13 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

ஒரு மணி நேர தாமதத்தின் பின்

## யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.27

யாழ் பல்கலைக் கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழா நேற்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது.

மூன்று பகுதிகளாக இந்தப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவின் முதற்பகுதி காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதாக இருந்த பொழுதும் 10.22க்கே நிகழ்ச்சி ஆரம்பமானது.

நேற்று 720 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

மருத்துவத் துறையில் டாக்டர் வில்லியம்போல் தங்கப்பதக்கத்தை செல்வி. ஜெசி குமுதினி காசிநாதர் பெற்றுக் (6ஆம் பக்கம் பார்க்க)

## பற்றிக்ஸ் பகுதியில் சூடு! இரு இளைஞர்கள் மரணம்!!

குருநகர், நவ 27

யாழ் சென்பற்றிக்ஸ் பகுதியில் நேற்றுக் காலை ஏழு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். பாடசாலை மாணவன் ஒருவன் காயமடைந்தான்.

இந்தச் சம்பவத்தை அடுத்து யாழ் மரியன்னை பேராலயப் பகுதியும், அச்சுக்கூட வீதி, குருசோவ் வீதி, மத்தியூஸ் வீதி, சென்- பற்றிக்ஸ் வீதி ஆகியவையும் இந்தியப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன.

இப்பகுதி வீடுகளில் இருந்து கூட்டிவரப் (6ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற்சாலைகளை இயக்க வேண்டாம்

### மின்சாரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ, 27

குடாநாட்டிற்கான மின் விநியோகம் சீராகும் வரை இப்பகுதியில் மூன்று அவத்தை (Three Phase) மின்சாரத்தை உபயோகிக்கும் தொழிற்சாலைகள், மில்கள் மற்றும்நிறுவனங்களைசெயற்படுத்துவதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பணிமனை இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

யாழ்.மாவட்டம் முழுவதற்கும் ஒரே சமயத் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார விநியோகம்; உத்தேச நேர விவரம்

யாழ்ப்பாணம் நவ 27

சுன்னுகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ஜெனரேட்டர் மூலம் பல்வேறு பகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்படும் உத்தேச நேர விவரங்கள் வருமாறு:-

★ பருத்தித்துறை மின்சார சூப்ரின் டென்ட (6 ஆம் பக்கம் பார்க்க)

## உதயவேளையில் உங்களுடன்.....

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

உங்கள் உள்ளம் கவர்ந்த உதயன் இன்று தனது மூன்ருவது ஆண்டு நிறைவு தினத்தைக் கொண்டாடுகிருன்.

ஈழத் தமிழ்ப் பத்திரிகை உலகில் மூன்று அகவைகளை மட்டுமே பூர்த்தி செய்த மழலை அவன்.

உதயன் ஆரோக்கியத்துடன் வளர்ந்து திடகாத்திரமாக விளங்குவதற்கு உங்கள் ஆதரவே பலம்.

அவனது வளர்ச்சியில் உங்கள் பங்கு அளப்பரியது. நீங்கள் பாலித்த அன்பும், அபிமானமும், ஆதரவும் அளவிடற்கரியன.

அந்த வகையில், அவன் நான்காவது ஆண்டில் காலடி எடுத்துவைப்பது கண்டு, களிப்படையும் உங்களுடன், நாமும் சேர்ந்து கொள்கிறேம்.

பத்திரிகை மக்கள் பணி செய்யும் மக்கள் தொண்டன். அவர்களின் சேவகனுக, காவலனுகக் கடமை இயற்றுபவன். மக்கள் நலன் ஒன்றே இலட்சியமாக உழைக்க வேண்டியவன்.

உங்கள் நல்வாழ்வும், இன்பமுமே தனது இலட்சியமாகக் கொண்டு தமிழ் மக்களின் உந்தியில் உதித்தவன் உதயன்.

அந்த வகையில் —

உங்கள் நலனுக்கும் உயர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக உழைப்பதில் அவன் தன்னை அர்ப்பணித்து வருகின்ருன்.

பல இடர்கள், நெருக்கடிகள் மத்தியிலும தனது பணியை, தொண்டினை அவன் ஆற்றி வருகின்ருன்.

மக்களேதனது அதிபதி என்பதை உணர்ந்து, உதயன் மக்கள் சேவைக்குத் தன்னைத் தொடர்ந்தும் அர்ப்பணிப்பான்.

வயதில் இளையவனுக இருந்த போதிலும்,தனக்கு உரிய பொறுப்புகளை உணர்ந்து அவன் செயற்படுவான்.

மக்கள் நலனே— மக்கள் சேவையே— மகேசன் சேவை என்ற உறுதி குலையாமல் தொடர்ந்தும் செயற்பட்டு வளர்வதே அவனது பெரு விருப்பமாகும்.

அந்த விருப்பம் ஈடேற, அவன் தெய்வசக்தியையும், மக்கள் சக்தியையும் மட்டுமே நம்பி நிற்கிறுன்; நாடி நிற்கின்ருன்.

உதயனையும், சஞ்சீவியையும் உதயனின் குடும்ப வெளியீடுகளையும் ஆதரித்து வளர்க்க வேண்டியவர்கள் நீங்களே.

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் ஆகிய எல்லோரதும் ஆதரவே எமக்குப் பலம் தருவதாகும்.

இதுவரை அந்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளித்த அனைவருக்கும் இந்த நன்னுளில் எமது இதய பூர்வமான நன்றியை நவில்கின்ரேும்.

இனிமேலும் உங்கள் ஒருமித்த, பெருமித்த ஆதரவை வேண்டுகிரேும்.

உங்களுக்கு எங்கள் பணி தொடரவும், வளரவும்—

உதயன் உங்கள் உள்ளத்தில் நாளின்நாயகனுக நீக்கமறமலரவும்—

எல்லாம் வல்ல முருகன் அருட்சக்தியை ஆராதனை செய்து நிற்கின்ரேும்.

வணக்கம்.

— நிர்வாகிகள்.

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Honda Chaly Motor Cycle விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும்; றாஜா சென்ரர் (புத்தகசாலை) காட்டுப்புறுதிக் கூட்டுத்தாபனம் வன்பாக, ஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (7942)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் Printing Cards). திருமண வாழ்த்துக்கள் பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் (C/357)

## றேணியோ

தரமான றேணியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம். "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல. 19, 8ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/692)

## விசேட பயிற்சி வகுப்புக்கள்

றேடியோ ரெலிவிஷன் டெக், வயறிங், வெல்டிங், பிளம்பிங், றீவைண்டிங், குளிரியல் மோட்டோர் மெக்கானிசம் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு; Nesta Technical Institute, 59 Station Road, Jaffna. (7829)

## இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். கராதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)


## கோழிக்குஞ்சு

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

## சேவை

தமிழ் ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் 'ஷப்ரு' சேவைப் பிரிவு, இல. 19, 8ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

# 61 ஆம் நாள் நினைவஞ்சலி



## பாலசரகுணம் சிவபாலன் (பாலன்)

தோற்றம்: 27 - 03 - 1965 மறைவு: 26 - 09 - 1988

திதி: 25. 11. 1988


பாசத்தோடு எம்மைப் பாரினில் அணைத்தவனே! நேசத்தை எங்கள் நெஞ்சில் விதைத்தவனே பாசத் திருவிளக்கை ஏற்றிச் சென்றவனே. தூயவனே நீ வாழ்ந்த வீட்டை நெருப்பினிலே தங்கி இருந்தெமக்கு உன்னுயிர் தவிப்பினிலே பற்றி எரியுதய்யா பாசமுள்ள நெஞ்சமிதங்கே, பெற்ற மனம் எரியுதைய்யா பேதை உனை எண்ணி எந்நாளும்.

உன் பிரிவால் துயருறும், குடும்பத்தினர்.

25 11 88 அன்று நடைபெற்ற அந்தியேட்டி வைபவத்தில கலந்துகொண்டு மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

காரைக்கால் லேன்,
நாச்சிமார் கோயிலடி. (7830)

# முதலாம் வருட நினைவஞ்சலி



## சிற்றம்பலம் சுப்பிரமணியம்

ஆண்டவனடைப்பு: 10-02 1924 அழிப்பு 10-11-1987

வழிமேல் விழிவைத்து உம்மைக்
காத்திருந்தோமே என்ன
பழிதான் சூழ்ந்ததுவோ
நாமறியோம் எமது
விழிகாண் நீரைப் பொழிகின்றதுவே ஒரு
மொழிதான் இல்லையே உமதன்பை
எடுத்துரைக்க
வாரங்கள் சென்றன வருடங்கள் ஆயின
நீ எங்களை விட்டு
தூரத்திற்கே சென்று விட்டாய்
துடிக்கிறோம்
ஊராரும் உற்றாரும் உன்னை
மறந்தாலும் உன்
பேரர் நாம் என்றும் உமைப்
போற்றுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 10-11-88ல் நடைபெற்றன

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

அராலி வடக்கு,
செட்டியார் மடம். (7959)

# வேலை வாய்ப்பு!

**Libiya:** Plumbers
Fitters
Fibre Glass Technicians
Insulation Technicians

**Salary Rs. 10,000\- + Food**

(1) சவூதி: எயர்போட் ரைக்சி றைவேர்ஸ்
(சம்பளம்: 7500 + ரிப்ஸ்)

(2) கொறியன் கொம்பனி வேலையாட்கள்
(ரூபா 4000- + சாப்பாடு)

காலை 10 மணிக்கு முன நேரில் வரவும்

சிவா மாஸ்ரர்
**Employment Consultant**
Eralalai. (7977)

# லேடி இராமநாதன் நினைவு உரை


யாழ்ப்பாணம், நவ 27

லேடி லீலாவதி இராமநாதனின் ஞாபகார்த்த சொற்பொழிவு இன்று 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் நடராசா நினைவுச் சொற்பொழிவை வழங்குவார். (ச)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நவம்பரில் மறைந்த அந்த ஒளியைத் தேடுகின்றோம்



## பொன்னையா விஜயராஜா (சிங்கர்)

தாயின் மடியில்: 27-06-1967 அழிப்பு 26-11-1987

திதி: 27-11-1988

நவம் 26ஆம் திகதியே ஏன விடிந்தாய்? எங்கள் விஜியைப் பறிப்பதற்கோ?

அன்பே எங்கள் விஜியே! என்னென்று நாங்கள் உம்மை மறப்பது நீர்பாடிய பாட்டுக்களும் பேசிய ஒவ்வொரு வசனமும் எமது செவிகளில் தினமும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது எங்களை விட்டுப் பிரிய நீர் எங்ஙனம் துணிந்தீர் நீர் பிரிந்து ஒருவருடம் ஆகிவிட்டது. ஆனல் என்றும் எம் உள்ளத்தில் நீர் உறைவாயா? உன் எடுப்பான தோற்றமும் கம்பீரமான முகமும் புன்முறுவல் பூத்தவண்ணம் இருக்கும் உன் அகரம்! என்றுமே எம்முடன் இணைந்தே இருக்கும்

ஆத்மா சாந்திக்காக கண்ணீர் பூக்களால் இறைவனைவேண்டிநிற்கும்

அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
உற்றார் உறவினர்.

நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம். (7978)


+
J. M. J.

# உங்கள் பயண அமைப்பாளர்




# மத்திய கிழக்கில் உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

## JORDAN - யோர்தான்

யோர்தான் அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்படும் விமான நிலையம், வைத்தியசாலை பாடசாலை ஆகியவற்றில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகச் செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| Cleaners | U. S 450 |
| General Helpers | U S 450 |

வயதெல்லை: 18—35

## சவூதி அரேபியா

சவூதி அரேபியா அரசுக்குச் சொந்தமான பாரிய மீன்பிடிக் சப்பல்களில் பணிபுரிவதற்குக் கீழ்காணும் பதவிவெற்றிடங்கள் உடனடியாக உள்ளன.

| | சம்பளம் | | |
|---|---|---|---|
| Captain / Master - | 1500 S R | 12.000/- | ரூபா |
| III rd Engineer | 1200 S.R | 10.000/- | ரூபா |
| மீன்பிடித் தொழிலாளர்கள் | 900 S.R | 7, 200/- | ரூபா |

உணவு இருப்பிட வசதிகள் இலவசம்

விரும்பும் கடற்தொழிலில் போதிய அனுபவம் உடையவர்கள் மட்டும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

## Saudi Visa

1. Mr. Marian Vincent Sutharasingh
   கரையூர் - H 0376706
2. Mr. Sebamalai Mariyan Thevathasan
   ஊர்காவற்றுறை - J 0260845
3. Mr. Emmanuel Francis Justin
   ஊர்காவற்றுறை - H 0306598
4. Mr. Manuel Dadycilus alias Douglus Selvakumar
   - H 0292 92

மேலே குறிப்பிட்ட பெயர் உடையவர்களுக்கான பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விசா மற்றும் ஒழுங்குகள் மிகத் துரிதமாகச் செய்து தரப்படும், மேலதிக விபரங்களுக்கு உடனே நேரில் வருக.

உங்கள் பயண அமைப்பாளர்

# எஸ். பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபன அருகாமை)
யாழ்ப்பாணம். (C/797)

# Accountancy Courses

## For May/June 1989 Examinations

| | | ஆரம்பம்: |
|---|---|---|
| **C.I.M.A. (I.C.M.A.)** | | |
| STAGE | I | 3—12—88 |
| STAGE | II | 10—12—88 |
| STAGE | III | 10—12—88 |
| **A.A.T. (London)** | | |
| PRELIM | | 3—12—88 |
| INTER | | 17—12—88 |
| FINALS | | 17—12—88 |
| **A.A.T. (Sri Lanka)** | | |
| LEVEL | I | 3—12—88 |
| LEVEL | II | 17—12—88 |
| **CERTIFICATE IN ACCOUNTING (London)** | | 3—12—83 |
| **I.A.B.** | | |
| FOUNDATION | | 3—12—88 |
| INTER | | 17—12—88 |
| FINAL | | 17—12—88 |
| **I.D.P.M.** | | |
| PART | I | 3—12—88 |
| PART | II | 17—12—88 |

Our Panel of Lecturers includes:

M/s R N VARENDIRAN, K. NANTHAKUMARAN, K. KAMALAKUMAR, V ARIYARATNAM K ARAVINDAN, S THILAKAKUMAR, S NARENDIRAN K. MAHENDIRAN & D. GNANASEELAN

Contact:

'Result Oriented Institute in Jaffna'

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane,
Hospital Road, JAFFNA.

(C 785)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் மூன்றாம் ஆண்டு நிறைவு மலர்

## உதயன் மேலும் வளர்ந்து மக்களுக்கு நற்பணி ஆற்றுக

### நல்லை ஆதீன முதல்வர் நல்லாசி

உதயன் பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி ஓர்



சிறப்பு மலர் வெளிவருவது வெகுபொருத்தமும், மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

நடுநிலைமையையும்-சத்தியத்தையும் கடைப்பிடித்து சேவையாற்றும் தினசரிகள் மக்கள் மத்தியில் பெருமதிப்புப் பெறுவது திண்ணம். அந்த வகையில் 'உதயனும்' உயர்ந்துள்ளதை யாவரும் அறிவர்.

மேலும் உதயனின் வார இதழான சஞ்சீவி வார இதழில் தேர்ந்தெடுத்த கட்டுரைகள், கதைகள்' மகான்களின் அமுத மொழிகள் ஆகியன யாவர் உள்ளங்களையும் கவரக் கூடியன. முக்கியமாக இக்கால கட்டத்தில் இளம் உள்ளங்களிலே தெய்வ நம்பிக்கையை தெய்வ உணர்வை, உயர் சிந்தனைகளை நாம் வளர்க்க வேண்டும். விரக்தி மனப்பான்மை அகல வேண்டும்.

அதற்கமைய சஞ்சீவியில் அவர்கள் ஆவலோடு விரும்பிப் படிக்க நகைச்சுவை கலந்த கட்டுரைகள், கதைகள் ஆகியன பிரசுரமாவதையும் நாம் காண்கிறோம்.

முழுமையாக மக்கள் சீரிய வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்தொழுக எல்லாவகையாலும் பத்திரிகையாளர்கள் உதவ வேண்டும். எவ்வுயிரும் நாடுவது இன்ப நுகர்வு. அது அசைக்க முடியாத இறைபக்தியினால் பெறப்படின் அதற்கிணை ஏது?

உதயனும், சஞ்சீவியும் மேன்மேலும் வளர்ந்தோங்கி, மக்களுக்கு நற்பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களை உளமாரத் தியானித்து எமது நல்லாசிகளை வழங்குகிறோம். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்)

## நீதி தழைத்தோங்க கதிர் பரப்புவோன்

''உதயன்'' உதித்து மூன்றாண்டின் முதிர்ச்சியை அடையும் இந்நாளைக் காண்பதில் நாமும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

உயிர்களை உய்யவைக்கவென கதிரோன் தன் கதிர்களைப் பரப்புவது போல எம் உதயனும் இச் சமுதாயத்தில் நீதியும் தர்மமும் தழைத்தோங்கிட தன் ஒளிர்தனை உதிர்த்திடுவான் என வாழ்த்தி, உள்ளதை உள்ளபடி உரைத்திடும் உத்தமர் பட்டியலில் உதயனுக்கும் ஓர் இடம் நிரந்தரமாகிட வேண்டும் எனும் எமது

**அருட்திரு கே. பி. கோவிந்தராஜ்**
(மெதடிஸ்த திருச்சபை)

## மக்கள் சுபீட்சத்திற்காக தொடர்ந்து உழைக்குக

ஜனநாயகக் கோட்பாடுகளின் படி பத்திரிகைச் சுதந்திரம் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டிய வேளையில் ஒரு சோதனையான கால கட்டத்தில்'' 'உதயன்' நாளிதழ் ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக சிறப்பான முறையில் மக்களுக்குச் சேவையாற்றி நான்காவது வருடத்தினுள் நுழையும் உதயன் பத்திரிகை எதிர் வரும் காலங்களிலும் மக்களிடையேஇன, மத, வர்க்க வேறுபாடுகளின் காரணமாக தோன்றியிருக்கும் இன்றைய போராட்டங்களுக்கு தனது தூர நோக்கான பார்வையுடன் ஆழ்ந்த கருத்துக்களையும் சிறந்த தெளிவுகளையும் மக்களின் ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும், சுபீட்சத்திற்காகவும் தொடர்ந்து வழங்க வேண்டும்.

எந்த அதிகாரத்தின்பிடியிலும் சிக்கிப் பலியாகி விடாமல் தனது உயர்ந்த பணியைத் தொடர வேண்டுமென ஆசித்து வாழ்த்துகிறேன்.

**மௌலவி: பி.ஏ. எஸ்.சுப்யான்(யாகூத்தி)**



வாஞ்சையை வெளிப்படுத்துகின்றோம்.

இக்கட்டான இன்றைய காலகட்டத்தில் செயல்படுவது கஷ்டம் தான். இருந்தும் உதயன் வெற்றியோடுவீறுநடை போடும் என்று கூறி மீண்டும் வாழ்த்துகின்றோம்.

## உயர்ந்த கருத்துக்களுடன் உதயன் பணி தொடரட்டும்

'உதயன்' தனது மூன்று ஆண்டுகளைச் சிறப்பாக நிறைவு செய்வதையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

எம்மவர்களுடைய அறிவு வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று. சமூக உணர்வு என்பனவற்றை மக்களிடையே ஏற்படுத்துவதில் அயராது உழைத்த பெருமை உதயனுக்குரியது.

ஆரம்பகாலம் தொடக்கம் இறையருளும், பெரியவர்களுடைய ஆசியும், அறிஞர்களுடைய ஆலோசனைகளும் உதயனுடைய பல்துறை வளர்ச்சிக்குத் துணை புரிந்தன.

உதயன் பணிமனையைச் சேர்ந்தவர்களுடைய செயற்திறனும், ஓவியரின் கைவண்ணமும், நிர்வாகிகளின் சேவை மனப்பான்மையும் உதயனின் உயர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

உதயனின் முதலாவது இதழில் ''உதய வேளையில் உங்களுடன்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கருத்தை இன்று நினைவு கூர்வது மிகப் பொருத்தமாகும். அதில் தெரிவிக்கப்பட்ட உயர்ந்த கருத்துக்களை உதயன் தொடர்ந்து கடைப்பிடித்து ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்ற குறிக்கோளுக்கேற்பப் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

- சி. க. திருச்சிற்றம்பலம் -

## பத்திரிகா தர்மத்தைப் பேணுவதற்கு வாழ்த்து

சனநாயக தத்துவம் எங்கே நிலைக்கிறதோ அங்கே பத்திரிகைகளின் பெருமையும் பேராற்றலும் பொங்குகின்றன. இவை ஒன்றிற்கொன்று ஆதாரமாகவும் உள்ளன. அத்துடன் ஒன்றித்தும் இருப்பன. இவற்றின் வாழ்வையும், வளர்ச்சியையும், செழுமையையும் விரும்பாதவர்கள், கண்டு மகிழாதவர்கள் இல்லை என்ற நிலை ஏற்படும் போது தான் நாட்டில் சுபீட்சம் நிலவும்.

மக்கள், குரல் பெற்ற காலத்திலிருந்து, மனங்களில் உணர்ச்சிகள் ஒன்று கூடும்போது, அவற்றை வெளிப்படுத்தும் பழக்கத்தைக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இது மக்களின் வாழ்க்கைப் பழக்கமாகி விட்டது அதிலிருந்து அவர்களால் விடுபட முடியாது. இவ்வுரிமை மறுக்கப்படுவது என்பது அவர்களின் வாழ்வு மறுக்கப்படுவதற்கு ஒப்பாகும்.

சனநாயக சமுதாயத்திலேயே' மக்கள் குரல் மகேஸ்வரன் குரலாகக்' கொண்டு அதற்கு மதிப்பும் அளிக்கப்படுகிறது. மக்கள் குரலைப் பிரதிபலிக்கும் உயர்ந்த சாதனமாகப் பத்திரிகைகள் விளங்குகின்றன.

அத்தோடு மக்களின் நாகரிகம், கல்வி. கலாசாரம், பண்பாட்டு மரபுகள் அறிவியல், ஆத்மீகம் ஆகியவற்றைப் பேணவும், பரப்பவும் அவற்றிற்கு விமரிசனம் தந்து அவற்றின் அடிப்படையில், வளர்ச்சியும் மாற்றமும் காணும் நவீன சமுதாயத்திற்கு இசையப் புதிய கருத்துக்களை உருவாக்கவும் பத்திரிகைகள் சிறந்த ஊடகமாக மிளிர்கின்



றன. இவை யாவும் உண்மை, நீதி, நேர்மை, நடுநிலைமை என்னும் அடிப்படையில் நிகழ்த்தப்படும் போது பத்திரிகைகள் உயர்வு பெறு

(5ஆம் பக்கம் பார்க்க)

**கு. சோமசுந்தரம்**
பதில் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## இனிய நாளிதழ் உதயன்!

ஈழம் வாழ் தமிழ் மக்களின் உணர்ச்சிகளையும் குறிக்கோளையும் எடுத்துக்கூறும் இனிய தமிழ்



ஏடாக மூன்று ஆண்டுகளாக உதயன் நாளிதழ் வெளியாகி வருகிறது என்பதை அனைவரும் அறிவர்.

விரைகின்ற காலத்தினிடையே வாழ்வு ஓடிக்கழிகிறது. ஆண்டுகள் ஒவ்வொன்றும் கழிகின்றபோது வரப்போகும் காலத்தின் செயற்பாடுகள் பற்றிய எண்ணங்களும் வலுவடைகின்றன.

நடந்து கொண்டிருக்கும் காலத்தில் இடம்பெறும் துன்பங்களெல்லாம் வரப்போகும் காலத்தில் சதிரவனைக் கண்ட பனிபோல மறைந்துவிட வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் தோன்றுமென்பதில் ஐயமில்லை.

எனவே உதயனின் மூன்றாண்டு நிறைவின் மூலமும் இதனையே வேண்டிநிற்கிறோம். சமூகத்துக்கு ஆற்றும் பல்வேறு பணிகளில் மகத்தான ஒரு பணியாகக் கருதப்படுவது பத்திரிகைப் பணியாகும்.

''நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - இது நமக்கே யுரியதாம் என்பதறிந்தோம் பூமியிலெவர்க்கு மினி அடிமை செய்யோம்-பரிபூரணனுக்கே யடிமை செய்துவாழ்வோம்.'' என்பது பாரதியாரின் உண்மையுள்ளத்தெழுந்த எழுச்சிக் கவிதைகள்.

இக்கருத்தமைந்த உள்ளம் அனைவருக்கும் அமைய வேண்டுமானால் எமது மண்ணிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளின் எழுத்துப்பணியே இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. உதயன் வெளியீட்டோடு சஞ்சீவி வெளியீடும் சனிக்கிழமைகளில் எம்மவர்க்குக் கிடைப்பது வரப்பிரசாதமாகும்.

கல்வி, கலாசாரம், வரலாறு, மருத்துவம், சமயம் ஆகிய துறைகளை அளாவிநிற்கும் ஒரு பயனுள்ள வெளியீடு சஞ்சீவியாகும்.

எனவே மூன்றாண்டு நிறைவையொட்டி 'உதயன்' நிறுவனத்தாருக்கு எமது வாழ்த்துக் கூறுவதோடு அனைத்துத் தமிழ் உள்ளங்களிலும் இடம்பெறவேண்டும் என்று ஆசி கூறி அமைகிறேன்.

**சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை)

## கலை, பண்பாட்டுத்துறையில் பத்திரிகைகளின் பங்கு

''உதயன்'' பத்திரிகைக்கு மூன்றாவது ஆண்டு நிறைந்து விட்டது என்பதை அறியும் போது மிகுந்த மகிழ்ச்சி கின்றன. அத்துடன் மக்கள் கருத்தினை உருவாக்கும் பணியிலும் ஈடுபடுகின்றன. இப்பணிகளெல்லாம் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு

(4ஆம் பக்கம் பார்க்க)

**பேராசிரியர் அ, துரைராஜா**
(துணைவேந்தர் யாழ்.பல்கலைக் கழகம்)



## கெடுபிடிக்கு மத்தியில் எழுந்துநிற்கும் உதயன்

நான்காம் வருட உதயம் உதயனுக்கு 28 ஆம் திகதி நவம்பர் 88 ஆம் ஆண்டு உதிக்கின்றது. 27 ஆம் திகதி உதயனுக்கு மூன்று வருடங்கள் பூரணமாகின்றது.

கடந்த மூன்று வருடங்களும் ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் மறக்க முடியாத எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற சந்தர்ப்பங்களும் சூழ் நிலைகளும் நிறைந்ததாக இருந்தன.

''உள்நாட்டு'' அரசியல் கொந்தளிப்புகளும், இராணுவ கெடுபிடிகளும், மலிந்து நிறைந்து மக்களின் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்த்தின. மரணத்தின் உண்மையையும், சமுதாயத்தின் சகிப்புத் தன்மையையும் மக்கள் உணர்ந்தார்கள்.

இக்கால கட்டத்தில் பல போக்குவரத்து, மின் விநியோகச் சீர்கேடு, ஊரடங்குச் சட்டங்கள், வேறு பல கட்டுப்பாடுகளுக்குள்ளும், அடிபட்டு விழுந்து எழுந்து உதயன் நின்று இயங்குவது பாராட்டப் படவேண்டியஒருசெயல்.

வருங்காலம் கொலைகளும், கொள்ளைகளும், கடத்தப்படுவதும், தண்டிக்கப் படுவதும்தான் முதல் பக்கச் செய்தியாக இல்லாமல் சமுதாயத்தின் முன்னேற்றகரமான செய்திகளே முதற் செய்தியாகத் திகழ வேண்டும் என்று இறைவனை வேண்டி, உதயன் மக்களுக்கு சேவை செய்ய வாழ்த்துகின்றேன்.

உண்டாகின்றது.

உதயனின் இலட்சியங்கள் மிகவும் போற்றத்தக்கவை, சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு மிகவும் அவசியமானவை.

செய்திப் பத்திரிகைகள்; உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்நிகழும் செய்திகளை வெளியிட்டு வாசகர்களின் அறிவினை விரிவு செய்கின்றன. அதேவேளை அவை பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பனவாகவும் அமை

**டாக்டர். எஸ். நச்சினார்க்கினியன்**
(பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை)

"உதயன்" மேலும் பொலிவுற எமது நல் வாழ்த்துக்கள்!



50 SHABRA



207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

--ஷப்ரு நிறுவனமும்
பணியாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவேண்டியன ஆகும்.

''உதயன்'' பத்திரிகை மேற்படி பணிகளைத் திறம்படச் செய்து வருவது பாராட்டத்தக்கது. இந்த நாட்டு மக்களின் கலைத்துறையிலும் பண்பாட்டுத்துறையிலும் இப் பத்திரிகை ஆற்றும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

நெருக்கடிகள் பலவற்றிடையேயும் நேர்மையும் நடுநிலைமையும் பேணப்படுமாயின் அது சமுதாயத்துக்குப் பெரு நன்மையைத் தரும். இந்த உண்மையை நினைவுகூர்ந்து, 'உதயன்' தொடர்ந்து நெடுங்காலம் தொண்டுகள் புரியவேண்டுமென்று மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

வடபகுதியில்

## பம்பாய் வெங்காயச் செய்கை பெருவெற்றி

வடபகுதியில் இவ்வருடம் பம்பாய் வெங்காயச் செய்கை பெருவெற்றியீட்டியுள்ளது

பம்பாய் வெங்காய செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு இம்முறை அதிகப்படியான இலாபம் கிடைத்திருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில சுமார் 220 ஏக்கர் நிலப்பரப்பில் பம்பாய் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது.

பம்பாய் வெங்காயத்தை கொள்வனவு செய்வதில் தனியாரும், கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களும் போட்டியிட்டதால் உற்பத்தியாளருக்கு அதிக இலாபம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது (சி-90)

## கல்லூரிக்கு புதிய கட்டடம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிக்கு மூன்று லட்சம் ரூபா செலவில் வகுப்பறைகளைக் கொண்டகட்டடமொன்று கட்டப்பட்டு வருகின்றது. (இ-70)

## ஓய்வு பெற்றார்



திரு. கனகசபை பிணகபாணி தமது 33 வருட ஆசிரிய அதிபர் சேவையினின்றும் ஒய்வுபெற்றுள்ளார்

இவர் 1956 இல் மாத்தளை நிக்காக்கொல சீ.சி.த. பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பதவி ஏற்று 1972 ஆம் ஆண்டு தொடக்கம் அதிபராக சங்கானை ஸ்தான அமெரிக்கன் மிஷன் பாடசாலை, கோப்பாய் வடக்கு ரோமன் கத்தோலிக்க பாடசாலை, யாழ் வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம் ஆகியவற்றில் சேவையாற்றினார்.

திரு.பிணகபாணி வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்ற காலம் இவ்வித்தியாலயத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமானதொரு கட்டமாகும்.

இவர் மக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாகஇருந்து மிகுந்த ஆர்வத்துடன் அறிவொளி பரப்பும் அரிய தொண்டில் ஈடுபட்டு உழைத்தார்.

இவருடைய காலத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் தொடர் முயற்சியினால் பிறர் பயன்படுத்திய பாடசாலைக் காணியின் ஒருபகுதி பாடசாலைக்கே சொந்தமாக்கப்பட்டது

அதுமட்டுமல்ல பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் துரித முன்னேற்றம் ஏற்பட்டதன் பயனாக மாணவர் எண்ணிக்கை இரட்டித்திருந்தது.

இவர் தமது அனுபவத்தினாலும் அறிவினாலும் ஆசிரியர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளை வழங்கி பாடசாலையின் முதல் முகவராக விளங்கினார். (இ-ச)

## ஆராதனை மண்டபங்கள்

நெடுந்தீவு நவ 27

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் இந்து கத்தோலிக்க ஆராதனை மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-111)


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

**கம்பியூட்டர் கல்வி**

**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

ஆரம்பம்: 5. 12. 88 பயிற்சிக்காலம்: 1 1/2 மாதம்

கட்டணம: 950/- (இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)

**COMPUTER PROGRAMMING IN dBASE III**

ஆரம்பம்: 6. 12. 88 பயிற்சிக்காலம்: 2 மாதம்

கட்டணம்: 1250/- (பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I. B. M. (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு நாள்: 3. 12. 88

**UNIKCO COMPUTER CENTRE**

No: 5, POWER HOUSE Rd,
2 nd LANE, JAFFNA.
(Near Sub - Post Office) (C/780)



**Jaffna English Academy**

(A LUX IN TENEBRIS)

**NCE (Elementary) Examination.**

**LONDON CERTIFICATE**

London Examination held at Jaffna English Academy The local Examination Centre for Pitmans.

Assessment of Answerscripts and Award of Certificates from Pitmans-London.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்றுப் புலமை பெறவும் London Certificates பெறவும் அரியதொரு சந்தர்ப்பம்.

விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் 10-30 a.m. to 12-30 p.m.

காலம்: 3 மாதங்கள்

முழுக்கட்டணம்: ரூபா 350/- மட்டும்

தொடக்கம்: 4-12-88

**TOEFL:**

More past papers will be done. Intensive Coaching to help students to achieve success.

விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் 8-30 a.m. to 10-30 a.m.

காலம்: 3 மாதங்கள்

முழுக்கட்டணம்: ரூபா 300/- மட்டும்.

தொடக்கம்: 4-12-88

விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன் (C-770)



**FORTUNA ENTERPRISES**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

1. தைவான்
தொழிற்சாலைத் தொழிலாளர் (Unskilled Factory Workers)
சம்பளம்:- ரூபா 12,000/- + இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)

2. குவைத்
தொழிலாளர்-Labourers
சம்பளம் 30 KD - Rs 3300/- + இருப்பிட வசதி

3. சிங்கப்பூர்
SINGAPORE: Mould Makers
சம்பளம் $ 1500/- - Rs 2400/- + இருப்பிடவசதி

4. பாறெயின்
எலக்ரிஸன் - Electrician (Wiremen)
சம்பளம் BD 120/- =Rs 9840/-
(Interview in Colombo on 3-12-88)

நாட வேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**

3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்- (7828)


**1ஆம் ஆண்டு நினைவு தினம்**

கண்ணிற் காணாது, கண்காணாத தூரத்தில் இருந்து தவிக்கும் அன்புச் செல்வங்கள் செலுத்தும்

**கண்ணீர் அஞ்சலி**

1ஆம் ஆண்டு நினைவு தினம் 9-11-88
அப்பா: க. வ. பாலசிங்கம் (சட்டத்தரணி)
அம்மா: திருமதி பத்மராணி பாலசிங்கம்
பாட்டி: திருமதி இராசாத்தி

அன்பின் அப்பா, அம்மா, பாட்டி! எமக்கு வளமான வாழ்வு வேண்டி எம்மை வெளிநாடு அனுப்பி வாழவைத்த அன்புத் தெய்வங்களே! எமக்கு உயர் கல்வியூட்டி நற்பண்பு புகட்டி நலமாக வாழ வைத்த தியாக உள்ளங்களே! ஏன் எம்மை இறைவன் இந்தப் பேரிடியில் ஆழ்த்தினார்?. அகிலமே அழிந்தாலும் மாறாது உம் நினைவு...........

உணவு உண்ட மேசையில் உம்மைக் காலனுக்கு இரையாக்கினரே, உமது உயிரற்ற உடலைத் தானும் காணப் பாக்கியம் அற்ற பாவிகள் நாம்.

உங்கள் ஆன்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்:
அன்பு
மகன், மகள்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

9-11-88 அன்று ஆத்மசாந்திக் கிரியைகள் நடைபெற்றன.
அப்போஸ்தலிக்க கார்மேல் [illegible],
அச்சுவேலி. (7963)


**PERSONAL CLASSES FOR**

PHYSICS — R. சத்தியசீலன் B.Sc
ZOOLOGY — R. ஈசன் B.Sc

A/L 89 Day Classes ஆரம்பமாகிவிட்டது
A/L 89 & 90 Sat/Sun வகுப்புகள்

ஆரம்பம்: 27-11-1988
ஞாயிறு காலை 8-30

B. M. C. முன்லேன் - யாழ்ப்பாணம். (C-790)



**அர்ச்சுனு**

**தைப்பொங்கல் பரிசுப் போட்டி**

மாணவர்களிடத்து இலக்கிய உணர்வு பெருகி மாணவர் உலகம் ஆக்க இலக்கியப் பாதையில் நடைபயில வேண்டும் என்று அர்ச்சுனு விரும்புகிறான்

இந்த அடிப்படையில் 1989ஆம் ஆண்டு தைப்பொங்கல் நன்னாளை முன்னிட்டு மாணவர் பங்குபெறும் பின்வரும் போட்டிகளை நடத்த அர்ச்சுனு முன்வந்துள்ளான்.

| குறள் விளக்கச் சிறுகதை | சுயசரிதை ஆக்கம் |
| --- | --- |
| 1ஆம் பரிசு: ரூ. 500/ | 1ஆம் பரிசு: ரூ. 300/- |
| 2ஆம் பரிசு: ரூ. 300/- | 2ஆம் பரிசு ரூ. 200/- |
| 3ஆம் பரிசு: ரூ. 200/- | 3ஆம் பரிசு: ரூ. 100/- |

இவ்விரு போட்டிகளிலும் பரிசுகளைப் பெறும் மாணவரின் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் சுவர்க்கடிகாரம் வழங்கப்படும்.

குறள் விளக்கச் சிறுகதைப் போட்டி:

* 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'
* 'மகன்தந்தைக் காற்றும் உதவி யிவன் தந்தை எந்நோற்றான் கொல்எனும் சொல்'
* 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றி யான்'
* 'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தந்நோய்போற் போற்றாக் கடை'
* 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது'
* 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'

விதிகள்:-

* மேற்காணும் குறள்பாக்களில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாக வைத்து சிறுகதையை எழுத வேண்டும்.
* கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பெறத் தகுதி உடையவர்கள்.
* சிறுகதை 4 புல்ஸ்காப் தாள் பக்கங்களுக்கு மேற்படலாகாது. தாளின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதவும்.

சுயசரிதை ஆக்கம்:

**1. குடை 2. பேனா 3. காலணி 4. நாற்காலி**

விதிகள்:-

* ஆண்டு 7, 8, 9 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பெறலாம்.
* மேற்காணும் 4 விடயங்களில் ஒன்றினைப் பற்றிய சுயசரிதையை மாணவர்கள் எழுதலாம்.
* ஆக்கம் இரண்டு புல்ஸ்காப் தாள் பக்கங்களுக்கு மேற்படலாகாது. தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவும்.

பொது விதிகள்:-

* ஆக்கம் மாணவர்களின் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்தவையாக இருத்தலாகாது.
* பரிசுபெறும் ஆக்கங்கள் அர்ச்சுனாவில் வெளிவரும். பதிப்புரிமை அர்ச்சுனாவுக்கு உண்டு.
* மாணவனது சொந்த ஆக்கம் என்ற கல்லூரி அதிபரின் உறுதியுரை ஆக்கத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
* நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

போட்டி முடிவு திகதி: 31-12-88

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
'அர்ச்சுனா',
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம்.

(C 778)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் மூன்றும் ஆண்டு நிறைவு மலர்

## கடவுள் நம்பிக்கையும் தன் நம்பிக்கையும்

**சில** ஆண்டுகளுக்கு முன் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்த பொழுது ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டிக் கொண்டு அத்தியடியிலிருந்து வைமன் வீதியால் போகும்பொழுது தெருவில் எனது தங்கை ஒருவர் (சிறிய தாயின் மகள்) தென்பட்டாள். மோட்டாரை விட்டு இறங்கி குசலம் விசாரித்தேன். இந்த கொளுத்த வெயிலில் எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டேன். அதற்குத் தங்கை காலையில் இவரும் நானும் நல்ல வாய்ச் சண்டை. குமர் ஒன்று வீட்டில் இருக்கிறது. சண்முடிக் கொண்டு திரிகிறியள் என்றுஏசினேன். இரண்டு பேரும் வாக்கு வாதப் பட்டோம். உடனே கந்தருக்கு (நல்லூர் சந்நதிக்கு) ஒரு சொல்லு சொல்லுவோமென்று வெளிக்கிட்டேன்' என்றாள்.

நான் கந்தர் என்ன சொன்னார் என்று கேட்டேன். கும்பிட்ட பிறகு மனது ஆறுதல் அடைந்தது என்றும் அதனால் வீடு திரும்புவதாகவும் கூறினாள் நான் அதற்கு இன்னும் கொஞ்ச நேரம் கோயிலிலிருந்திருக்கலாமே ஏன் விழுந்தடிச்சு வீட்டை போகிறாய்' என்று கேட்டேன். மனம் நிம்மதி வந்ததும் அவர் சாப்பிட்டாரோ என்று யோசித்துவிட்டு கெதியாய் வீட்டை போகிறேன் என்றாள். இந்த சம்பாஷணையில் எனது தங்கை பல தத்துவங்களைத் தெரிந்தோ தெரியாமலோ காட்டி விட்டாள்.

வாக்கு வாதம் வந்தால் வீணாக வளர்க்காமல் கடவுளிடம் முறையிட்டால் ஏதாவது வழி காட்டுவார் என்பதையும் மனைவி, புருஷன் சிறுசண்டைகள் தற்காலிகமானவையென்றும் எனது தங்கை சிறப்பாக காட்டி விட்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கத்தோலிக்க ஒகஸ்தீன் அடிகள் கூறியது எனது மனதில்படுகிறது. அடிகளாரை ஒருவர் ஓர் அநீதியைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டால் என்ன செய்வீர்கள் எனக்கேட்டதும் அடிகள் உடனே தான் கோவிலுக்கு சென்று பதினைந்து நிமிடம்வரையும் ஆண்டவனைக் கும்பிட்டுவிட்டு விடயத்தை மறந்து விடுவேன் என்றார் அதாவது அந்த அநீதியை ஆண்டவனுக்கு சமர்ப்பித்துவிட்டால் அதுவே போதும் என்பது அர்த்தமென்று நான் கருதுகிறேன். கடவுள் ஆவன செய்வார் என்பது நம்பிக்கை.

### முழு நம்பிக்கையும் பாதி நம்பிக்கையும்

கடவுள் நம்பிக்கை என்றால் முழு நம்பிக்கை வேண்டுமென்பதை திரௌபதியின் துயில் உரியும் காட்சியை பலர் உதாரணத்துக்குக் கூறுவர். துச்சாதனன் துயில் உரியும் பொழுது தோழுக்கு மேல் இருக்கும் துயிலை ஒரு கையால் பிடித்துக்கொண்டு கிருஷ்ணனை மனதாலும் வாயாலும் அழைத்தாள். ஆனால் கிருஷ்ணன் உதவிக்கு உடனே வரவில்லை ஏனென்றால் பாதி நம்பிக்கையை இன்னும் தன் கையிலே வைத்திருப்பதால். பிறகு துயிலிலிருந்து கையை விட்டு விட்டு முழுமனதுடன் கிருஷ்ணனை அழைத்ததும் தன்னிடம் சரண் அடைந்து விட்டாளென்று துயிலை வளரச் செய்தார் கிருஷ்ண பரமாத்மா.

பொது மக்கள் சில வேளையில் முழுப்பொறுப்பையும் கடவுளிடம் ஒப்புவித்து விட்டு சோம்பலாயிருக்காத வண்ணம் ராமகிருஷ்ண பரமஹம்சர் நடைமுறைக்கேற்ப கூறுகிறார். "உங்கள் கருமங்களைச் செய்யும் பொழுது நீங்களே முழு மூச்சுடன் செய்வதாக எண்ணிச் செய்யுங்கள். ஆனால் அடி மனதில் கடவுள் தான் எங்கள் மூலம் இக் கருத்துக்களை செய்கிறார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இதை எழுதவும் சொல்லவும் மிகவும் சுலபம். ஆனால் வாழ்க்கையில் அனுசரிக்க மிகவும் கஷ்டமென்றாலும் இது வாழ்க்கைக்கு ஒரு நல்ல ஊன்றுகோல் என்று கருதுகிறேன்.

கடவுள் நம்பிக்கையில்லாமல் வாழலாம் என்று சில இளைஞர் கூறக் கூடும். ஐநூறு கோடி மக்கள் வசிக்கும் இப் பூமியில் குறைந்த பட்சம் நூறு கோடி மக்களின் வாழ்க்கை அகராதியில் கடவுளுக்கு இடமில்லை. ஆனால் இவர்கள் வசிக்கும் நாடுகளும் இவர்கள் இருக்கும் சூழ்நிலைகளும் எங்கள் நாடுகளும் சூழ்நிலைகளும் மிகவும் வேறுபட்டவை.

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்தச் சூழ்நிலையில் மதம் உதிக்கிறது அல்லது மறைகிறது. சரியோ பிழையோ எங்கள் நாடுகளில் சமயம் மக்கள் இதயத்தில் ஊன்றி விட்டது ஆகையால் சமயத்தை தவிர்த்து ஆக்கபூர்வமான கருமங்கள் செய்ய முடியாது.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். இந்தியாவின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவரான அமரர் ராஜாஜி மாட்டுச் சாணத்தை பசளையாக உபயோகிப்பதை ஊக்குவிப்பதற்கு நேரடியாக மக்களுக்கு கூறவில்லை. அப்படிக் கூறினால் மனதில் பதியாது அவர் கூறியதாவது:– பசுவுக்கும் எருதுக்கும் இந்து மக்களின் வழிபாட்டில் ஓர் முக்கிய இடமுண்டு. ஆகையால் இதன் சாணமும் போற்றக் கூடியது.

வீட்டைச்சுத்தம் செய்கிறோம், திருநீறு பெறுகிறோம் உமியுடன் சேர்த்து வரட்டி தட்டி எரிபொருளாய் பாவிக்கிறோம்.

இவைபோல் வயல்களுக்கு சாணமிடுவதும் ஒரு புனித கருமம் இக் கருமத்தை செய்தால் எங்களுக்கு புண்ணியமுண்டு என்று ராஜாஜீ கூறியதும் மக்களுக்கு வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல் மனதில் பதிந்துவிட்டது கடவுள் நம்பிக்கை உடைய மக்களைக் கையாளும் முறை இதுவேயென்று இதனால் புலப்படுகிறது.

கடவுள் தூரத்தில் இல்லை எங்களுடன் தான் இருக்கிறார் அவர் எங்களில் ஒருவர் என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் பல தடவைகளில் கூறியிருக்கிறார். இதை நாம ஏற்றுக்கொண்டால் கடவுள் நம்பிக்கை வாழ்க்கையுடன் சேர்ந்து விடும். அப்பொழுது ஒருவன் தன்னைத்தானே உயர்த்துவதுமல்லாமல் மற்றவர்களுக்கும் பலன் தரக்கூடிய முறையில் வாழ்வான் வாழ்க்கையில தூய்மை வரும், கருணை வரும், கெட்ட எண்ணங்கள் ஓடி விடும் எல்லாவற்றிற்கும் மேல் கடவுள் பக்தி வளரும்.

பிள்ளைகளுக்கு இளமையில் சமயத்தை வளர்ப்பதற்கு பெற்றோர் பாடுபட வேண்டும். இளமையில் நல்லொழுக்கத்திற்கு சமய நம்பிக்கை மிகவும் தேவை. பிள்ளைகள் வளர்ந்த பிறகு சமயத்தை பேணுவதோ இல்லையோவென்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும் இந்தத் தீர்மானத்திற்கு வாழ்க்கையிலிருந்து எதை எதிர்பார்க்கிறோமென்பதை பொறுத்தது.

உணவும் களிப்பும் தான் உலகில் தேவையென்றால் சமயமில்லாமல் வாழலாம். ஆனால் அவர்களும் இக்கட்டான நிலை நேரிட்டதும் "ஐயோ, கடவுளே" யென்று கூறுவார்கள். ஏதாவது ஒரு இலட்சியமில்லாமல் ஒருவரும் வாழக்கூடாது. அப்படிப் பட்ட வாழ்க்கை வாழ்க்கையல்ல. இப்படிப்பட்டவர்கள் கம்பர் பெருமான் கூறியவாறு ஆல், அரசு, பனை போல் வளர்ந்தவர்கள்தான். ஆகையால் ஏதாவது நல்ல இலட்சியத்தோடு வாழ்வோம்.

உலகம் இயங்குவது ஒவ்வொரு மனிதனின் தன் நம்பிக்கையில்தான் இதோடு கடவுள் நம்பிக்கையும் சேர்த்துக்கொண்டால் வாழ்க்கை சோபிக்கும்.

**நா. மாணிக்க இடைக்காடர்**

## திக்கெட்டும் பரவட்டும்

நான்காவது வயதில் காலடி எடுத்து வைக்கும், "உதயன்" பத்திரிகையின் மூன்று ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி அளிப்பதில் பெரும் மகிழ்வெய்துகின்றேன்



கடந்த ஆண்டுகளில் யாழ் நகரில் இடம் பெற்ற அசம்பாவிதங்களுக்கு மத்தியிலும், தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு சோதனைமேல் சோதனைகளுக்கு மத்தியிலும், தான் எடுத்த முயற்சியைக் கைவிடாது. பத்திரிகா தர்மத்தைக் கட்டிக் காத்து, எவருக்கும் அஞ்சாமல் பத்திரிகைத் துறையில் ஒளிவிடும் ஞாயிருகத் திகழும் உதயன், சஞ்சீவி ஆசிரியர் குழுவினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கும் உதயன். சஞ்சீவி பத்திரிகைகளின் சேவை திக்கெட்டும் பரவ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. கனகரத்தினம், ஜே. பி யூ. எம்:**
(தலைவர், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை)

## பத்திரிகா.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.

மூன்று ஆண்டுகள் முழு நிறைவு பெற்றுப் பூரிப்பில் நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் "உதயன்" இக்காலப்பகுதியில் நமது பகுதியின் கல்வி விருத்திக்கு ஆற்றிவந்த தன்னலமற்ற பணிகளை நினைவு கூருவதிலும், அவற்றிற்காக நன்றி பாராட்டுவதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கல்வித் திணைக்களச் செய்திகளை மக்கள் நலனுக்காக உடனுக்குடன் பிரசுரித்து நமது பணிகளை முட்டின்றி ஆற்றுவதற்கு உதவியமை உளக்களிவுடன் பேற்றுகற்குரிய கைங்கரியமாகும்.

உதயன், நற்சேவைகளை நலமுடன் தொடரவும். பத்திரிகா தர்ம உணர்வுடன் பணியாற்றி உயர்வு பெறவும் நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இவ்வேளையில தெரிவித்துக்கொள்கின்றேன்.

## கடும்புதர் விலக்கி கழாப்பழம் சேர்த்தல்

இன்று ஈழநாட்டிலே பத்திரிகை நடத்துவதென்பது 'கடும்புதர் விலக்கிச்சென்று கழாப் பழம் சேர்ப்பதுபோலத் தான்' ஆயினும் உங்கள் பணி அளப்பரியது.

கேட்பார் யாருமில்லாத தட்டி வழிநடத்த தலைமையில்லாத சமூகமாக தமிழினம் உள்ள வேளையிலே உதயன் இடித்துரைக்கும்நண்பன் போல, தட்டிக்கேட்கும் கமயன்பால உபதேசம் சொல்லும் ஆசானைப் போல பலதுறைகளில், இனத்தை வழிநடத்திச் செல்கிறான்.

★ இலங்கை இந்திய ஒப்பந்தம்

★ பல்கலைக் கழகப் பிரச்சினை

★ பலாலி ஆசிரியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அறியாமை போக்க

தங்கள் 10-7-88 ஆம் திகதிப் பத்திரிகையில் "வர்த்தகர் கவனத்திற்கு" என்ற ஆசிரியர் தலையங்கம் மிகவும் வரவேற்கத்தக்கதாக அமைந்ததையிட்டு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும் இவ்வித சூழ்நிலைகளில் பலரின் அறியாமையைப் போக்குவதற்கு பத்திரிகைகள் பலவித பங்கினைச் செய்வது மிக முக்கியமானதாகும். தொடர்ந்தும் செய்வீர்கள் என்று எண்ணுகிறேன்.

ரி. குணசேகரம், பொறியியலாளர்
யாழ்ப்பாணம், 20-07-1988

## நன்றிகள் பலப்பல

பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்த யாழ். கரையோர மீனவருக்கும் நிவாரணம் பெற்றுத் தரக்கோரி நாம் விடுத்த நியாயமான வேண்டுகோளை உதயன் பத்திரிகை தனி மதிப்புக் கொடுத்து சுடச்சுட வெளியிட்டது.

இதன் பயனாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் குறிப்பிட்ட மூன்று கிராமங்களுக்கும் உணவுப் பொருள்களை வழங்கினர்.

இதற்காக தங்கள் பத்திரிகை நிறுவனத்திற்கு எனது சார்பிலும் எனது சங்கம்சார்பிலும் பொது மக்கள் சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

**எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை**
தலைவர், பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலையம். 19-10 1988

## ஆறுதல் தந்தது

தங்கள் 'உதயன்' பத்திரிகையில் வெளி வந்த 'இம்மியும் இல்லையே' என்ற ஆசிரியத் தலையங்கம் என்னை மிகவும் கவர்ந்தது. துணிச்சல் மிக்க உங்கள் ஆக்கம் ஜி சி ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்ற முடியாது இன்னல்பட்டுக் கொண்டிருக்கும் எம்போன்ற மாணவர்களுக்கு நிச்சயம் ஆறுதல் அளித்திருக்கும்.

எம் குறைகளை வாய் விட்டுச் சொல்ல, பேச எவருமே இல்லாத இந்த அவல நிலையில் துணிச்சலாகவும் சிறப்பாகவும் ஏற்ற கருத்துகளை எடுத்தியம்பியதுக்கு எனது பாராட்டுகளை ஹாட்லிக் கல்லூரி ஜி சி. ஈ சாதாரணதர மாணவர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**எஸ். எஸ். ரமேஷ்குமார்**
ஹாட்லிக் கல்லூரி மாணவன்
17- 3- 1988

## பத்திரிகைகளின் தோற்றம்

உலகின் முதல் பத்திரிகை 1605 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவில் வெளிவந்தது.

இலங்கையின் முதல் பத்திரிகை 1832 ஆம் ஆண்டில் பிரசுரமானது. "கொழும்பு ஜர்னல்" என்ற ஆங்கிலப் பத்திரிகைதான் அது.

1843 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் நாளிதழான சிலோன் டைம்ஸ்பிரசுரமாகியது.

இந்தியாவில் முதல் பத்திரிகை 1780 ஆம் ஆண்டில் பிரசுரமானது.

நன்றி 'பத்திரிகை இயல்':- மணிமேகலைப் பிரசுரம்.

## மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து 'ஜெ' அணியின் பொருளாளரானர் 'திரு'

சென்னை, நவ. 26

ஜெயலலிதா அணியில் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு மீண்டும் சேர்ந்துகொண்டார்,

ஜெயலலிதா பற்றி தான வெளியிட்ட கண்டனங்களுக்கு திருநாவுக்கரசு மன்னிடப்புக் கேட்டுக்கொண்டார்.

(அதைத்தொடர்ந்து) மறுபடியும் அவர் அ. தி மு.க ஜெ' அணியின் பொருளாளராக நியமிக்கப்பட்டார்.

தனிச்சையாக அ. தி. மு. க. நால்வர் அணியைச் சேர்ந்த நாவலர் நெடுஞ்செழியன் தமிழ்நாடு ஆந்தபா காங்கிரஸ தலைவர் கருப்பையா மூப்பனருடன் தேர்தல் கூட்டுபற்றிப் பேசியிருந்தார்.

இது திருநாவுக்கரசுவுக்குப் பிடிக்கவில்லை.

தனனிச்சையாக ஜெயலலிதா நடந்துகொண்டது பிடிக்காமற்தான் திருநாவுக்கரசு 'ஜெ' அணியில் இருநது நாவலர்,பண்ருட்டி, அரங்கநாயகம் ஆகியோருடன் வெளியேறி நாலவர் அணியை அமைத்தார்

நாவலர் மூபபனரைச் சந்தித்ததுபற்றி திருநாவுககரசு கருத்துவெளியிடடார். நாம் அனைவரும் காங்கிரஸுடன் கூட்டுவைக்கவே விரும்புகிறோம். இதனிடையில் நாவலர் ஏன் தன்னிச்சையாக மூப்பனாரைச் சந்தித்து கூட்டுபற்றி தீர்மானிகக வேண்டும்?—இப்படி திருநாவுக்கரசு கேட்டார்.

திருநாவுக்கரசு மீண்டும் சேர்ந்தது பற்றி ஜெயலலிதா சொன்னதாவது!

தமிழ் நாட்டில் எம். ஜி ஆர் ஆட்சியை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமே கிடையாது.

கே: உங்கள்மீது திருநாவுக்கரசு பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்தாரே!

ஜெயலலிதா: குற்றச்சாட்டுகளைச் சுமத்தியவர்களே இக்கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும். (எ)

## வழக்கறிஞர் வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 26

இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளின் நிழ்ச்சிகளை டெலிவிஷனில் ஒளிபரப்பவேண்டும் என்று புதுடில்லி உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (எ)

**வெளி உலகில்**

## லாவோஸில் வியட்நாம் துருப்புக்கள் முற்றாக விலக்கிக்கொள்ளப்படவில்லை

### தாய்லாந்து அரசு அறிவிப்பு

பாங்கொக், நவ 26

லாவோஸ் நாட்டில் இன்னமும் 20 ஆயிரம் வியட்நாம் துருப்புக்கள் உள்ளன.

வியட்நாம் துருப்புக்கள் முழுவதும் வெளியேறிவிட்டதாக லாவோஸ் அரசு தெரிவித்திருப்பது பச்சைப் பொய் என்று தாய்லாந்து அரசு அறிவித்திருக்கிறது.

லாவோஸில் உள்ள 40 ஆயிரம் வியட்நாம் துருப்புக்களும் வெளியேறி விட்டன.

சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடனான தகராறுகளுக்கு இதன் மூலம் தீர்வு காணப்பட்டு விட்டது என்று லாவோஸ் வெளியுறவு அமைச்சர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதற்கு மறுப்புத் தெரிவிக்குமுகமாக, பாங்கொக்கில் தாய்லாந்து இராணுவ அதிகாரி மறுப்பு ஒன்றை வெளியிட்டார்.

லாவோஸில் இருந்த 40 ஆயிரம் வியட்நாம் துருப்புக்களில் அரைப் பங்கு விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டது உண்மை ஆனால் இன்னும் 20 ஆயிரம் வியட்நாம் துருப்புக்கள் லாவோஸில் உள்ளன— என்று அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

### உயிரிழப்பு

கொலம்பியா நாட்டில் இடம்பெற்று வரும் கிளர்ச்சிகளில் இந்த ஆண்டில் இதுவரை [illegible] உயிரிழந்தனர் என்று [illegible]

இஸ்ரவேலினால்

## கைப்பற்றபட்ட அரபு பிரதேச நிலை மோசமடைந்து வருகிறது!

### ஐ.நா. ஸ்தாபனத்துக்கு பொதுச்செயலாளர் அறிக்கை

ஜநா நவ 26

ஆக்கிரமிப்புக்குள்ளான அரபுப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்ய ஐநா அதிகாரிகளுக்கு இஸ்ரவேல் அரசு இன்னமும் அனுமதி வழங்கவில்லை.

ஐ நா பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் ஐநாவுக்கு சமர்ப்பித்த அறிக்கையொன்றில் இதைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பகுதியில் நிலைமை மோசமடைந்து வருகிறது.

கடந்த செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 50 பலஸ்தீனியர் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனியரை நாடு கடத்துவது கைதுசெய்து [illegible] வைப்பது, அவர்களின் வீடு [illegible] வைத்துத் தகர்ப்பது ஆகிய வற்றில் இஸ்ரவேல் அரசு ஈடுபட்டுள்ளது

இது பலஸ்தீனப பிரச்சினைக்குத் தீர்வு காண உதவாது; அதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும்

பலஸ்தீனியர் தங்கள் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்புப் பெறுவதற்கு ஜெனிவா சாசனம்இடமளிக்கிறது'

பேச்சுக்கள் மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

இப்படி பொதுச் செயலாளர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார் (எ)

## தமிழ்நாட்டுக்கு ராஜீவ் அடிக்கடி வந்து போகும் மர்மம் என்ன?

### கருணாநிதி பதில்

சென்னை நவ 26

இந்தியாவின் பிரதமராக அடுத்த தேர்தலில் வரமுடியாத நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வர ராஜீவ் காந்தி முயற்சிக்கிறார்.

சென்னையில் நடந்த தி மு க கூட்டம் ஒன்றில் பேசுகையில் தி. மு க தலைவர் மு கருணாநிதி முன்கண்டவாறு சொன்னார்.

தமிழ்நாட்டில் திரு. ராஜீவ காந்தி அடுத்தடுத்து 6 முறை விஜயம் மேற்கொண்டது பற்றி திரு. கருணாநிதி இச் கருத்தை வெளியிட்டார்.

தேசிய முன்னணி, ஏழு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அமைத்த ஒன்று அல்ல; மக்கள் அமைத்த ஒன்று என்றும் திரு. கருணாநிதி சொன்னார். (எ)

## சீனாவில் உப்புக்குப் பங்கீட்டு முறை

சீனாவில் உப்பு பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்பட இருக்கிறது

1919 இல் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டது. அதன் பின்னர் உப்பு பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படவிருப்பது இதுவே முதல் முறை என்று பீபிசி அறிவித்தது.

பதுக்கல், தட்டுப்பாடு வரும் என்று அஞ்சி மக்கள் விழுந்து அடித்துக் கொண்டு வாங்குதல் ஆகியன காரணமாக உப்புக்குத் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாம்.

இதன் காரணமாகவே பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டதாக சீன அரசு அறிவித்திருக்கிறது. (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள் சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

உதயன்
27 - 11 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுரம் ★ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

## சிறிமா பதவிக்கு வந்தவுடன்
# ஒப்பந்தத்தை ரத்துச் செய்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு
### 5 கட்சிக் கூட்டத்தில் குமார் பேச்சு

கொழும்பு, நவ 27

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தவுடன் இந்திய இலங்கை ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு தமிழர் பிரச்சினைக்குச் சிறப்பான தீர்வு காணப்படும்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமார் பொன்னம்பலம் பேருவளையில் நடந்த ஐந்து கட்சி பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்

திரு. குமார் பொன்னம்பலம் அக்கூட்டத்தில் தமிழில் பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஐந்து கட்சிகள் கூட்டணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடுத்த ஓரிரு தினங்களில் சேர உள்ளது.

அமைதி உடன்பாட்டிற்குப் பின்னரும் சமாதானம் ஏற்படவில்லை. நிலைமை மேலும் சிக்கலாகியிருக்கிறது.

தமிழரின் அபிலாஷைகளை சிறிமாவோ அம்மையார் நன்கு உணர்ந்து இருக்கிறார். தமிழர் தலைநிமிர்ந்து சுதந்திரமான இனமாக வாழும் நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அமைதி உடன்படிக்கையை ரத்துச்செய்து விட்டு அதைவிட நீதியான வகையில் சிறப்பாக இனப்பிரச்சினையைத் தீர்க்க திருமதி பண்டாரநாயக்கா உறுதியாகவிருக்கிறார்.

தமிழ் மக்களின் சார்பில் தமிழ்க்குழுக்களுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு நாம் முன்வைத்த யோசனையை திருமதி பண்டார நாயக்காவும் கூட்டு முன்னணியினரும் ஏகமனதாக வரவேற்றனர் முன்னணியில் இடம்பெறாத தெற்கின் அமைப்புக்களும் அதனை வரவேற்றுள்ளன.

தமிழருக்கு தனிமாநிலம், கிழக்கு முஸ்லிம்களுக்கு மற்றொரு சபை. உரிய அதிகாரங்களும் வழங்கப்படும். இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பி தமிழ் மாநிலத்திடம் மக்களைப் பாதுகாக்கும் கடமை ஒப்படைக்கப்படும். சிங்களக் குடியேற்றம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை.

ஆகவே திருமதி பண்டாரநாயக்காவை தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

இப்படி திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூதும் பேசினார். (ஓ-எ)

## 3 சிப்பாய்கள் சுட்டுக்கொலை!

கொழும்பு, நவ 27

நேற்றுக்காலை தென் இலங்கையில் பத்தரமுல்லை என்னும் இடத்தில் மூன்று இலங்கை இராணுவச் சிப்பாய்கள் தீவிரவாத சந்தேக நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அரசு பஸ் ஒன்றை ஓட்டிச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவரை அந்த பஸ்ஸில் பயணிகளுடன் ஒருவராக இருந்த சந்தேக நபர் ஒருவர் கத்தியால் குத்திக் கொன்றார் என்றும்—

பின்னர் அச்சிப்பாயிடமிருந்த ரி- 56 துப்பாக்கியை அந்த நபர் பறித்துக் கொண்டார் என்றும் கூறப்பட்டது.

அச்சிப்பாயின் உதவிக்கு இன்னொரு பஸ்ஸில் இருந்த இரண்டு இராணுவச் சிப்பாய்கள் விரைந்தனர். அப்போது அந்த நபர் ரி- 56 ரக துப்பாக்கியால் அவர்களைச் சுட்டுக் கொன்றார். பெண் பயணி ஒருவரும் அப்போது சூட்டுக்கு இலக்காகி மரணமானார். (உ-எ)

## இரு இளைஞர் சூட்டுக்கு பலி!

யாழ்ப்பாணம், நவ. 27

காரைநகர் வலந்தலைப் பகுதியில் நேற்று இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை நான்கு மணி அளவில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட படையினர் அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது. (ஓ-10)

### பாலஸ்தாபனம்

யாழ். அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை 28ஆம் திகதி திங்கட்கிழமை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

காலை 8. 00 மணி தொடக்கம் 10. 45 மணி வரை வீரகத்தி விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

பிரம்மஸ்ரீ தி கி சீதாராம சாஸ்திரிகளின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை வண்ணார் பண்ணையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சைவப் பெரியார்கள் பலர் அஞ்சலி உரையாற்றுவர். (ஓ-ச)

## ஜனாதிபதித்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

றைய இரு வேட்பாளர்களுக்கெதிராகவும் ஜே. வி. பியினர் போர்க்கொடி தூக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜே வி. பி. மிரட்டலினால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தமுடியாது போனால் அல்லது ஜனாதிபதித் தேர்தல் குழம்பினால் மேற்கொள்ள வேண்டிய மாற்று நடவடிக்கைகள் குறித்து அரச உயர்மட்டத்தில் ஆராயப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் கடந்த இருநாட்களுக்குள் தெற்கில் ஏனைய அரசியற் கட்சிகளைச் சேர்ந்த பத்துக்கும் அதிகமான பிரமுகர்களை ஜே வி. பி. தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது

## யாழ். பல்கலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

மகப்பேற்றுத் துறையிலும் சென். ஜோர்ஜ் தங்கப்பதக்கம் செலவி. ஜெசி குமுதினி காசிநாதருக்கே வழங்கப்பட்டது

குழந்தை வைத்தியத் துறையில் டாக்டர் வி. வி பசுபதி தங்கப்பதக்கம் திரு. அருளானந்தம் வரதராசாவுக்கு வழங்கப்பட்டது.

சத்திரசிகிச்சைத்துறையில் டாக்டர் சுப்பிரமணியம் தங்கப்பதக்கம் திருவாளர்கள் இராமச்சந்திரன் ரவிச்சந்திரன், கணபதிப்பிள்ளை பார்த்தீபன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

கலைத்துறையில் டாக்டர் சி. சின்னத்துரை விருது திரு. தம்பிஐயா குணநேசனுக்கு வழங்கப்பட்டது.

திரு. தம்பிஐயா குணநேசன் வர்த்தக முகாமைத்துவத் துறையில் என். ஜீவரட்ணம் ஞாபகார்த்த விருதைப் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

விருதுகளை துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வழங்கினார்.

இதேவேளை — யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மாணவர்கள் பட்டமளிப்பு விழா குறித்த நேரத்தில் ஆரம்பமாவதைத் தடை செய்தனர்.

இதன் காரணமாகவே பட்டமளிப்புவிழா ஆரம்பமாக சுமார் ஒருமணி நேரம் தாமதம் ஏற்பட்டது. (ஓ-10-5)

## மின்சார.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ண்ட் பிரிவு காலை 7மணி முதல் காலை 8 மணி வரை.

★ வட்டுக்கோட்டை, வேலணை பிரிவுகள்- காலை 8 மணி முதல் காலை 9 மணி வரை.

★ காங்கேசன் துறை பிரிவு- காலை 9 மணி முதல் காலை 9. 30 மணி வரை. மீண்டும் காலை 10 மணி முதல் காலை 10. 30 மணிவரை.

★ யாழ்ப்பாணம் பிரிவு ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளுக்கு காலை 9. 30 மணி முதல் காலை 10 மணி வரை, ஏனைய பகுதிகளுக்கு காலை 10. 30 மணி முதல் காலை 11 மணி வரையும். நண்பகல் 12. 30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும்.

★ சாவகச்சேரி பிரிவு காலை 11மணி முதல் நண்பகல் 12 மணி வரை.

பொது மக்கள் நிலைமையை அனுசரித்து மின்சாரத்தை சிக்கனமாகப் பயன் படுத்தி அனைவரும் பயன் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் படி மின்சார சபை அதிகாரிகள் கேட்டிருக்கிறார்கள். (ஓ-ஐ-9)

## தொழிற்சாலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் மின்சாரம் வழங்குவதற்குநாற்பது மெகாவோட் மின்சாரம் தேவை.

ஆனால் தற்போது சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மூன்று மெகாவோட் மின்சாரம் மாத்திரமே யாழ். குடாநாட்டின் தேவைக்காகக் கிடைத்துவருகிறது.

இந்த மின்சாரத்தை அதிகளவு மின்னை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் பயன்படுத்துமேயானால் பொதுமக்களுக்கு பகுதியாக மின்சாரத்தை வழங்கும் நடவடிக்கை கூட பாதிக்கப்படும்.

எனவே சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் வட பகுதிக்கான மின்விநியோகம் சீராகும் வரையில் இயங்குவதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (ஓ-ஐ-9

## கடும்புதர்...

(5ம் பக்க தொடர்ச்சி)

பயிற்சிக் கலாசாலை

★ யாழ். வைத்திய சாலை
★ யாழ். நூலகம்
★ வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு
★ கோமாரி நோய்,

இவை சம்பந்தமாக உதயன் ஆசிரியர் கருத்துக்களை தவறாது படித்து வருகின்றேன். சுரண்டல் டிக்கெட் விற்பனை சம்பந்தமாக தாங்கள் போட்ட கருத்துரையோடு அக்கொடுமை அகன்றதையிட்டு மகிழ்ந்த உள்ளங்களில் நானும் ஒருவன்.

அத்துடன் தற்போது பத்திரிகை வாயிலாக இனத்துக்கு விழிப்பை ஊட்டத்தாங்கள்செய்து வரும் முயற்சியை தமிழ் உலகம் மறவாது. தொடரட்டும் உங்கள் அரும்பணி. அறிஞரின் பேனா முனையைப்போன்று வலுவுடைய ஆயுதம் உலகில் இல்லை என்பது நிரூபணமாகட்டும்.

வே. பேரின்பராசா
(படித்தமகளிர் திட்டம், மிருசுவில் - 1-6-1988)

## பற்றிக்ஸ் பகுதியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சிலர் பேராலய வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நண்பகல் வரை தேடுதல் வேட்டை இடம்பெற்றது.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது சென். பற்றிக்ஸ் கல்லூரி விடுதியில் தங்கியிருந்த பேர்னாண்டோ வோல்டர் (வயது 15) என்ற மாணவன் காயமடைந்து. யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் அச்சுக்கூட வீதி- பங்ஷால் வீதி மூலையில் கிடக்கக் காணப்பட்டது. (உ-ஓ-9-51)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகரத்தினம் அருள்சோதிரத்தினம்**

மலர்வு : 1947-10-18 அழிப்பு : 1987-11 09

திதி: 27-11-1988

கார்த்திகை பிறந்தவுடன் கண்ணீரும் பிறந்ததடா
பார்த்திருக்க அந்தப்பாழும் பிரச்சினையில்
காத்திருந்த மனைவியுடன் கண்மணியும் தனித்திருக்க
பூத்திருந்த முகம் கருகிப் புழுதியாய்ப் போனாயே
இன்பமும் செல்வமும் வஞ்சகரின் வலை வீழ்ந்து
துன்ப வதைப்பட்டுத் துடிதுடித்துச் செத்த துன்பம்
இன்னும் மாறாமல் நாமெல்லாம் தவிக்கையிலே
அன்பு மகனே அருள்சோதிரத்தினமே
'நீயும்' ஏன் பறந்தாய் உறவுகள் ஏன்மறந்தாய்

தாய் தந்தை,
மனைவி மகன் விஜேபா,
சகோதரன் சகோதரிகள்,
மைத்துனர்கள்.

'அருள்நிலை'
நவாலி தெற்கு, மானிப்பாய். (7711)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி செ.செல்வரத்தினம்**

(முன்னாள் ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர்கல்லூரி)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த நீங்கள் 11 ஆண்டுகள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் தங்கள் திரு உருவமும் நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

தங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்!
அன்புக் குடும்பத்தினர்

செல்வகிரி.
உடுப்பிட்டி. (7976)

உஷா
பெருமிதமாக அறிமுகப் செய்யும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்



உஷா ஸ்டான்டர்ட்
விலை : ரூபா 1500 முதல் 1575/-வரை

● 36", 42", 48", 56" அளவுகளில்
● ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர், புஷிங் 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது.
● மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள் !

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு

உஷா அலங்கார விசிறிகள்
பெண் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1750/- முதல் 1975/- வரை

● தேவைக்கேற்ப கண்கவரும் மண் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
● கோள்வடிவ மின்குமிழ்

தயாரித்து விநியோகிப்போர்:
உஷா இண்டஸ்ரீஸ் லிமிடெட்
68, அத்திடிய ரோட் ரத்மலானை
தொலைபேசி: 71-6922, 71-7914, 71-7141

Mc Ads 935+

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா கந்தையா

வேலணை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 111 அரசடிவீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் ஆகிய திருமதி தங்கம்மா 26 - 11 - 88 சனிக்கிழமை காலை காலமானார். அன்னார் கனகலிங்கம் (காலி வர்த்தகர்), விஸ்வலிங்கம் (கொழும்பு 4ஆம் குறுக்குத்தெரு நூர் ஜகான் றைஸ் ஏஜென்ஸி பங்காளர்), கோபாலபிள்ளை (சிரேஷ்ட வரிமதிப்பாளர், வருமானவரித் திணைக்களம், கொழும்பு) அவர்களின் அன்புத் தாயாரும், பாக்கியலட்சுமி, இமயவல்லி, கலாவல்லி அவர்களின் அன்பு மாமியாரும், திருமதி இராசம்மா சபாபதிப்பிள்ளை, காலஞ்சென்ற இ. கைலாசபிள்ளை (E. K அன்கோ, காலி), இ. தம்பையா அவர்களின் சகோதரியும், காலஞ்சென்ற அன்னம்மா, தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் அருமை மைத்துனியும் அரவிந்தன் (காலி), முரளீதரன் (கோயம்புத்தூர்,) சரவணபவன் (காலி), வனிதா (ஆசிரியை), சத்தியா, சத்தியசீலன் (கனடா), பிரேமலதா (திருச்சி), அன்பரசி, நற்குணசீலன், ஜெயசீலன், குமுதினி (யாழ். பல்கலைக் கழகம்), ரேணுகா, மாலினி, கோசலா, கோகிலா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மேற்படி இல்லத்தில் 28—11—88 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

111, அரசடி வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
க. கோபாலபிள்ளை

(7835)

### திருமதி செல்லப்பா செல்லம்மா

வீமன்காமம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்லப்பா செல்லம்மா அவர்கள் 24- 11- 88இல் ஊரெழுவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அருணசலம் உடையார் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற செல்லப்பா (அதிபர் மலேசியா), அவர்களின் அன்பு மனைவியும், திருஞானேஸ்வரி, யோகநாதன் (முகாமையாளர், ஸ்ரீ கிருஷ்ணா இன்டஸ்றீஸ், கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி), சம்பந்தநாதன் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பேராசிரியர் சதாசிவம், தனலட்சுமி தேவி, இந்திராதேவி ஆகியோரின் மாமியாரும், மதியழகன் (பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம் கொழும்பு), குந்தவி (மருத்துவபீடம், கொழும்பு), பூங்கோதை (பல்கலைக்கழகம், கொழும்பு), அன்பழகன், நிமலன், முகிலன், ஜனகன், சஞ்சீவன், சஞ்சுதா ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற அன்னமுத்து, காலஞ்சென்ற செல்வநாயகம், காலஞ்சென்ற இராசநாயகம், செல்வராசா, சிவக்கொழுந்து, பூரணசரஸ்வதி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26- 11- 88 சனி அன்று ஊரெழு மயானத்தில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

ஆலடி ஒழுங்கை,
ஊரெழு மேற்கு
சுன்னாகம்.

(7832)

### திரு. இரத்தினசிங்கம் குலநாயகசிங்கம்

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, பருத்தித்துறை)

துன்னாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் குலநாயகசிங்கம் காலமானார். இவர் திருமதி நந்தாவின் அன்புக் கணவரும் குமாரகுலசிங்கம், விஜயகுலசிங்கம், ஜெயகுலசிங்கம், சூரியபிரபா, இராஜகுலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்; அன்னாரின் ஈமக்கிரியைகள் 28. 11. 88 திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. ஜெயராசசிங்கம்.

(7979)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 27- 11- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 27th November 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org